**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.1, SRIVAIKUNATAM**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 378 of 2022** |
| Deposition of witness | : | **PW-1** |
| Name | : | **சங்கர பாண்டி** |
| Father Name | : | **சின்ன சங்கர சுப்பு** |
| Age | : | **45** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 19.05.2026.

Accused present.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது அனந்தநம்பிகுறிச்சியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்த வருகிறேன். சாட்சிகள் விஜயா மற்றும் பொன்பாண்டியை எனக்குத் தெரியும். ஆஜர் எதிரி செல்லபாண்டியை எனக்கு தெரியும். கடந்த 16.05.2021 ஆம் தேதி பகல் 12.30 மணி அளவில் அனந்தநம்பி குறிச்சியில் உள்ள எனது வயகாட்டில் நானும் எனது அக்கா பொன்பாண்டி, விஜயா ஆகியோர் முள்செடிகளை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்தபோது, அருகே ஆடு மேய்த்துக் கொண்டிருந்த ஆஜர் எதிரி கோழி அறிவாலுடன் அங்கு வந்தார்.

2. அந்த இடம் சம்பந்தமாக ஏற்கனவே பிரச்சனை இருந்தது. ஆஜர் எதிரி இடத்தில் பயிர் வைக்க முடியாது, விடவும் மாட்டேன், வெட்டி போடுவேன் என்று மிரட்டினார். எதிரி தனது கையில் வைத்திருந்த அறிவாளால் எனது இடது கண்ணுக்கு கீழ் பகுதியில் தாக்கினார். எனது அக்கா பொன் பாண்டி என்னை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அங்கே சிகிச்சையில் இருந்தபோது முறப்பநாடு போலீசார் என்னை விசாரித்து புகார்வாக்குமூலம் பெற்று என்னிடம் படித்து காண்பித்தார்கள். நான் சொன்னது போல் இருந்தது. நான் அதில் கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும்

புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்

**குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

//சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.//

(ஒ/ம்)B.தரணிதர்,
நீதித்துறை நடுவர் எண். 1,
ஸ்ரீவைகுண்டம்.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.1,**

**SRIVAIKUNATAM**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 378 of 2022** |
| Deposition of witness | : | **PW-2** |
| Name | : | **பொன்பாண்டி** |
| Father Name | : | **சின்ன சங்கர சுப்பு** |
| Age | : | **48** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 19.05.2026.

Accused present.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது அனந்தநம்பிகுறிச்சியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்த வருகிறேன். சாட்சி சங்கர பாண்டி எனது தம்பி ஆவார். சாட்சி விஜயா எனது உறவினர். ஆஜர் எதிரி செல்லபாண்டியை எனக்கு தெரியும். கடந்த 16.05.2021 ஆம் தேதி மதியம் 12.30 மணி அளவில் அனந்தநம்பி குறிச்சியில் உள்ள எங்களது தோட்டத்தில் நானும், சங்கர பாண்டி, விஜயா ஆகியோர் முள்செடிகளை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்தபோது, ஆஜர் எதிரி அருகே ஆடு மேய்த்துக் கொண்டிருந்கள்தார்.

2. நாங்கள் முள் செடியை ஒதுக்கிய காரணத்தினால் ஆஜர் எதிரி எனது தம்பி சங்கரபாண்டியை அசிங்கமாக பேசி , அறிவாளால் இடது கண்ணில் வெட்டிவிட்டார். எனது தம்பியை கொலை செய்து விடுவதாக மிரட்டினார். எனது தம்பியை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கே வந்த முறப்பநாடு போலீசார் எனது தம்பியை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். போலீசார் என்னையும் விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**//சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கணிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.//**

**(ஒ/ம்)B.தரணிதர்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**ஸ்ரீவைகுண்டம்.**